# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2094 - 2018 ඔක්තෝබර් මස 19 වැනි සිකුරාදා - 2018.10.19

*2094 ஆம் இலக்கம் – 2018 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*


*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி III – *காணிகள்*

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - |
| முன்னறிவித்தல்கள் | - |
| இறுதிக் கட்டளைகள் | - |
| காணிச்சீர்திருத்த ஆணைக்குழுவின் அறிவித்தல்கள் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |

| | பக்கம் |
|---|---|
| நிர்ணய உத்தியோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| காணி அபிவிருத்திக் கட்டளைச்சட்ட அறிவித்தல்கள் | 190 |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | - |
| நானாவித காணி அறிவித்தல்கள் | 192 |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின்கீழ் அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, *அதாவது 2018, நவெம்பர் மாதம் 09 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2018, ஒற்றோபர் மாதம் 26 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


189- B81459-353(2018/10)

# காணி அபிவிருத்திக் கட்டளைச்சட்ட அறிவித்தல்கள்

*இணைப்பு 9*

## *காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப்பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்*

*தென் மாகாண சபையின் மாத்தறை மாவட்டத்தில் அமைந்துள்ள அக்குறஸ்ஸ பிரதேச செயலாளர் பிரிவின், பிரதேச செயலாளர் ஓ. வி. சந்தன திலகரத்ன ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 (4) ஆவது உட்பிரிவின் கீழ், அதி உத்தமராம் சனாதிபதி அவர்களால் 1984.08.03 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள மாத்தறை/ ப்ர/ 9816 ஆம் இலக்க அளிப்புப்பத்திரத்தின் உரிமையாளரான கியான்டுவ, அக்குறஸ்ஸ எனும் முகவரியில் வசிக்கும் கிரிந்த கமகே மாடின் என்பவருக்கு கையளிக்கப்பட்டு மாத்தறை மாவட்டப் பதிவாளர், அலுவலகத்தில் L.D.O. 2958 ஆம் இலக்கத்தின் கீழ் 1986.12.22 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு பின்னுரிமையாளராவதற்குச் சட்ட ரீதியான உரிமையாளராக இருக்க விரும்பாத காரணத்தால் பின்னுரித்துக்கு ஒருவரும் நியமிக்கப்படவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால், குறித்த அளிப்புப்பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத் தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 2018.11.05 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் அறியத்தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.*

### *அட்டவணை*

*மாத்தறை நிருவாக மாவட்டத்தின் அக்குறஸ்ஸ பிரதேச செயலாளர் பிரிவின் வலிகம் கோரளையிலுள்ள கியான்டுவ கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த கியான்டுவ எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் நிலஅளவை மா அதிபர் என்பவரின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளதும், நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட இல. அ. க. பி. 180 ஆம் இலக்க வெளிக்களத் தாளில்/ இரேகை வரைதலில் இல. 281 ஆம் இலக்க காணித்துண்டெனக் காட்டப்பட்டதும் 01 ஏக்கர் 00 றூட் 04 பேர்ச்சஸ் விஸ்தீரண முள்ளதும் கீழே தரப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்டுள்ளதுமான அரச காணித்துண்டு.*

*காணியின் பெயர் : அன்னாசிகலஹேன.*

*ஓ. வீ. சந்தன திலகரத்ன,*
*பிரதேச செயலாளர்,*
*அக்குறஸ்ஸ.*

*2018, யூலை 25.*

*10- 543*

*இணைப்பு 9*

## *காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப்பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்*

*வடமத்திய மாகாண சபையின் அநுராதபுரம் மாவட்டத்தில் அமைந்துள்ள பதவிய பிரதேச செயலாளர் பிரிவின், பிரதேச செயலாளர் /பிரதிக் காணி ஆணையாளர் (மாகாணங்களுக்கிடைப் பட்ட ஆகிய கோமர முதியன்செலாகே கபுறு பண்டாகே றஞ்ஜித் பிரியதர்சன கபரபன்டகே றஞ்ஜித் பிரியதர்சன ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 (4) ஆவது உட்பிரிவின் கீழ், அதி உத்தமராம் சனாதிபதி அவர்களினால் 1997.10.28 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள அநு/பத/ ப்ர/ 2281 ஆம் இலக்க அளிப்புப்பத்திரத்தின் உரிமையாளரான பராக்கிரமபுர இலக்கம் 299/எ எனும் முகவரியில் வசிக்கும் ஸ்ரீராம ப்பராக்மண அதபத்து முதியன்சேலாகே லயனல் சன்திரசேகர என்பவருக்கு கையளிக்கப்பட்டு அநுராதபுரம் மாவட்டப் பதிவாளர், அலுவலகத்தில் 298/174 ஆம் இலக்கத்தின் கீழ் 1998.04.24 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப் பட்டுள்ள காணிக்கு பின்னுரிமையாளராவதற்குச் சட்ட ரீதியான உரிமையாளர் இல்லாத காரணத்தால் அல்லது உரிமையானவர் இருந்தும் அவர் பின்னுரிமையாளராக இருக்க விரும்பாத காரணத்தால் பின்னுரித்துக்கு ஒருவரும் நியமிக்கப்படவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால், குறித்த அளிப்புப்பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத் தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 2018.11.05 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.*

### *அட்டவணை*

*அநுராதபுரம் நிருவாக மாவட்டத்தின் பதிய பிரதேச செயலாளர் பிரிவின் உதுரு குருளு பற்றில்/கோரளையிலுள்ள பராக்கிரமபுர இலக்கம் 06 கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த பராக்கிரமபுர எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் ......... என்பவரின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளதும், நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்டு ......... ஆம் இலக்க வெளிக்களத் தாளில்/...... என்பவரால் தயரிக்கப்பட்டு ......... ஆம் இலக்க துண்டு பிரிக்கும் வரைபடத்தில் / ............ என்பவரால் தயாரிக்கப்பட்டு இரேகை வரைதலில் .......... ஆம் இலக்க காணித்துண்டெனக் காட்டப்பட்டதும் ...... 01 ஏக்கர் 00றூட் 00 பேர்ச் விஸ்தீரணமுள்ளதும் கீழே தரப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்டுள்ளதுமான அரச காணித்துண்டு : மேட்டுக் காணி*

வடக்கு : (இலக்கம் 245/பி) மேட்டுக்காணி ;
கிழக்கு : (இலக்கம் 250/ஏ) மேட்டுக்காணி ;
தெற்கு : (இலக்கம் 229/பி) மேட்டுக்காணி;
மேற்கு : பீ. ஒ. பீ. வீதிக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

ஜீ. எம். கே. ஆர். பிரியதர்சன,
பிரதேச செயலாளர்,
பதவிய.

2018, யூலை 04.

10- 717/1

---

இணைப்பு 9

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப்பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்**

அதி உத்தமராம் சனாதிபதி அவர்களினால் காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 (4) ஆம் உப பிரிவுக்கேற்ப 1982 ஆம் ஆண்டு யூலை மாதம் 6 ஆந் திகதி இலுக்படயாகமவில் வசிக்கும் திசாநாயக்க முதியான்சேலாகே நந்த குமாரஹாமி என்பவருக்கு அனு/பிர/4043 ஆம் இலக்க அளிப்பின் கீழ் பாரதீனம் செய்யப்பட்டு அநுராதபுரம் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் 1983.05.17 ஆந் திகதி 7/3308 ஆம் பதிவேட்டின் பக்கத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ள, கீழ்க்காணும் அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டுள்ள காணியை, சட்டரீதியான பின்னுரிமை வாரிசு இல்லை என அறிக்கை செய்யப்பட்டுள்ளதால் / இருக்கும் பின்னுரிமை வாரிசு கோர விரும்பவில்லை, என வடமத்திய மாகாணசபைக் குட்பட்ட கலேன்பிந்துனுவெவ பிரதேச செயலாளர் பிரிவின், பிரதேச செயலாளர் மார்கிறட் பீ. கும்பிரஹே ஆகிய நான், இத்தால் அறியத்தருகிறேன். ஆதலால் கட்டளைச் சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ், மேற்கூறிய அளிப்பை இரத்து செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்நடவடிக்கைக்கு ஏதேனும் ஆட்சேபனை இருந்தால் 2018.11.05 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்திலான சமர்ப்பணம் மூலம் எனக்குத் தெரிவிக்க வேண்டும்.

**அட்டவணை**

நில அளவை நாயகத்தினால் தயாரிக்கப்பட்டு - இலக்க வெளிக்களத்தாளின் பிரகாரம் நில அளவை நாயகம் அவர்களினால் தயாரிக்கப்பட்ட - இலக்கத் துண்டுகள் வேறாக்கப்பட்ட வரைபடத்திலிருந்து - என்பவரினால் நிர்மாணிக்கப்பட்ட எப்விபி 1430 ஆம் இலக்க பிரதிப்படத்தில் காணித்துண்டு இலக்கம் 99 எனக் காட்டப்பட்டுள்ளதும், அநுராதபுரம் நிருவாக மாவட்த்திற்குட்பட்ட கலேன்பிந்துனுவெவ பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த உடயன்குயம் பற்று/ கோரளையிலுள்ள 164 இலுக்படயாகம கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த இலுக்படயாகம எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் 04 ஏக்கர் 03றூட் 20 பேர்ச்சஸ் விஸ்தீரணமுள்ளதுமான அரச காணி. இதன் எல்லைகள் வருமாறு :-

வடக்கு : காணித்துண்டு இலக்கங்கள் 100 மற்றும் 103 ;
கிழக்கு : காணித்துண்டு இலக்கங்கள் 100 மற்றும் 109 ;
தெற்கு : காணித்துண்டு இலக்கங்கள் 98 மற்றும் 109 ;
மேற்கு : காணித்துண்டு இலக்கம் 100.

மார்கிறட் பீ. கும்புரஹே,
பிரதேச செயலாளர்,
கலேன்பிந்துனுவெவ.

2018, ஓகத்து 01.

10- 717/2

---

இணைப்பு 9

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப்பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்**

வடமத்திய மாகாண சபையின் அநுராதபுரம் மாவட்டத்தின் திரப்பனை பிரதேச செயலாளர் பிரிவின், பிரதேச செயலாளர் / பிரதிக் காணி ஆணையாளர் (மாகாணங்களுக்கிடையில்) எச். எம். எம். ரேனுகா குமாரி ஹேரத் ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உப பிரிவின் கீழ், அதி உத்தமராம் சனாதிபதி அவர்களினால் 1986, யூன் மாதம் 12 ஆந் திகதி அளிக்கப்பட்ட அநு/பிர/9978 ஆம் இலக்க அளிப்புப்பத்திரத்தின் உரிமையாளராகிய முரியாகடவலயில் வசிக்கும் அப்புஹாமிகே கலு பண்டாவிற்கு அளிக்கப்பட்ட அநுராதபுர மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் 2021 ஆம் ஆம் இலக்கத்தின் கீழ் 1995.10.30 ஆந் திகதி பதிவு செய்யப்பட்ட கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட காணிக்கு பங்குதாரராகுவதற்கு சட்டரீதியாக உரித்துடையவர் யாரும் இல்லாத காரணத்தால் அல்லது உரித்துடைய ஆள் ஒருவர் இருந்தும் அவர் பின்னுரிமையாளராக இருக்க விரும்பாத காரணத்தால் பின் னுரித்துக்கு ஒருவரும் நியமிக்கப்படவில்லை என அறிக்கையிடப் பட்டுள்ளது. ஆதலால் குறித்த அளிப்புப்பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத் தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 2018.11.05 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

**அட்டவணை**

அநுராதபுரம் நிருவாக மாவட்டத்தின் திரப்பனை பிரதேச செயலாளர் பிரிவில் உலுகல்ல கோரளே 43ஏ கிராம அலுவலர் பிரிவில் முரியாகடவல எனும் பெயருடைய ஊரில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்டு 4 ஆம் இலக்க வெளிக்களத் தாளின் இலக்கம் : இ. கி. வ. 18 ஆம் வரைபடத்தின் 75 ஆம் இலக்க காணித்துண்டாக குறிக்கப்பட்ட அளவில் 0.395 ஹெக்டயார் விஸ்தீரணமுள்ளதும் முரியாகடவல யாய (மேட்டு நிலம்) என குறிப்பிடப்படுகின்ற பின்வருமாறு எல்லைகளைக் கொண்ட அரச காணி :

வடக்கு : துண்டு இலக்கம் 74 ;
கிழக்கு : துண்டு இலக்கம் 80 ;
தெற்கு : துண்டு இலக்கம் 76 மற்றும் 80 ;
மேற்கு : துண்டு இலக்கம் 72 மற்றும் 80.

எச். எம். எம். ரேனுகா குமாரி ஹேரத்,
பிரதேச செயலாளர்,
திரப்பனை.

2018.07.09.

10- 717/3

---

இணைப்பு 9

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உபபிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப்பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்**

வடமத்திய மாகாணம், அநுராதபுரம் மாவட்டம், ராஜாங்கனை பிரதேச செயலாளர் பிரிவின், பிரதேச செயலாளர் பிஹிலிஎலே கெதர சுனில் அபேகோன் ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 (4) ஆவது உப பிரிவின் கீழ், அதி உத்தமராம் சனாதிபதி அவர்களினால் 1996.11.11 ஆந் திகதி அளிக்கப்பட்ட அளிப்பு இலக்கம் அநு/ராஜா/பி/3226 இன் சொந்தக்காரரான ராஜாங்கனை, வட்டார இலக்கம் 11 இல் வசிக்கும் வீர வைரோதி சமரநாயக ராஜபக்ஷ வாசல முதியன்சேலாகே பிரேமசந்திர என்பவருக்கு உரித்தாக்கப்பட்டுள்ளதும் அநுராதபுரம் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் 41 ஆம் இலக்கத்தின் கீழ் 2009.01.23 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ளதுமான கீழே அட்டவணையில் காட்டப்பட்டுள்ள காணித்துண்டுக்கு சட்டரீதியான பின்னுரித்தாளராக ஒருவர் நியமிக்கப்பட்டிருக்காமை அல்லது உரிமைக்காரர் ஒருவர் உள்ள போதும் அவர் பின்னுரித்தாளராக நியமிக்கப்பட விருப்பமின்மை காரணமாக பின்னுரித்துக்காரர் ஒருவர் நியமிக்கப்படாதுள்ளபோது குறித்த அளிப்பினை மேற்சொன்ன சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத் தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 2018.11.05 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

**அட்டவணை**

அநுராதபுரம் மாவட்டத்தில், ராஜாங்கனை பிரதேச செயலாளர் பிரிவு, விலச்சிய தெற்கு கோரளே 453 கிராம அலுவலர் பிரிவில் உள்ள வட்டார இலக்கம் 11 எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் நில அளவையாளர் தலைமை அதிபதி அவர்களால் தயாரிக்கப்பட்டு அவர் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ள 01 ஆம் இலக்க வெளிக்களத் தாளின் 16 ஆம் இலக்க இ. கு. வ. துண்டு பிரிக்கும் வரைபடத்தில் 427ஆம் இலக்க காணித்துண்டு எனக் குறிப்பிடப்பட்டுள்ளதுமான 00 ஏக்கர் 01றூட் 27 பேர்ச்சஸ் விஸ்தீரணமுள்ளதும் மேட்டுக் காணி என அழைக்கப்படும் பின்வரும் எல்லைகளைக் கொண்டதுமான அரச காணித்துண்டு :

வடக்கு : வட்டார இலக்கம் 08 இற்கான காணித்துண்டு ;
கிழக்கு : வட்டார இலக்கம் 08 இற்கான காணித்துண்டு ;
தெற்கு : மேட்டுக்காணித்துண்டு இலக்கம் 446 ;
மேற்கு : மேட்டுக்காணித்துண்டு இலக்கம் 428 மற்றும் 445.

பீ. ஜி. சுனில் அபேகோன்,
பிரதேச செயலாளர்,
ராஜாங்கனை.

2018.06.18.

10- 717/4

---

## நானாவித காணி அறிவித்தல்கள்

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.: 4/10/56895.
மாகாணக் காணி ஆணையாளரின் இல. : 11/BANK/18/01.

**முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்**

அம்பாறை மாவட்டம், அம்பாறை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சேனாநாயக்கபுர கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த சேனநாயக்கபுர எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் 280007 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம் 929 எனக் காட்டப்பட்டுள்ள 0.0379 ஹெக்டயர் விஸ்தீரணமுள்ளதுமான அரச காணியை வர்த்தக நோக்கத்திற்காகக் குத்தகைக்குத் தருமாறு கேட்டுத் தேசிய சேமிப்பு வங்கி விண்ணப்பித்துள்ளது என இத்தால் அறியத்தரப்படுகிறது.

02. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு :-
வடக்கு : காணித்துண்டு இலக்கங்கள் 2 மற்றும் 73;
கிழக்கு : காணித்துண்டு இலக்கங்கள் 73 மற்றும் 930;
தெற்கு : வரைபட இலக்கம் 930;
மேற்கு : காணித்துண்டு இலக்கங்கள் 930 மற்றும் 2.

03. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக்காணியை குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்.**- முப்பது (30) வருடங்கள் (2018.08.27 ஆந் திகதியிலிருந்து முன்னோக்கி 30 வருடங்கள்) ;

**வருடாந்தக் குத்தகை.**- மாண்புமிகு அமைச்சர் அனுமதிக்கின்ற தினத்தின் காணியின் மதிப்பீட்டு பெறுமதியானது ரூபா ஐந்து மில்லியனைவிட (ரூபா ஐந்து மில்லியன் 5,000,000) குறையும் சந்தர்ப்பங்களில் பிரதான விலை மதிப்பீட்டாளரின் விலைமதிப்பு அடிப்படையில் அவ்வருடத்துக்கான சந்தைப் பெறுமதியின் 2% ஆகும். குத்தகை அமுல்படுத்தும் வருடத்தின் காணியின் மதிப்பீட்டு பெறுமதி ரூபா ஐந்து மில்லியனைவிட (ரூபா ஐந்து மில்லியன் 5,000,000) தாண்டும் சந்தர்ப்பத்தில் பிரதான மதிப்பீட்டாளரின் விலைமதிப்பீட்டாளரின் விலைமதிப்பு அடிப்படையில் அவ்வருடத்திற்கான காணியின் சந்தைப் பெறுமதியின் 4% ஆகும். இக்குத்தகைப் பணமானது எல்லா ஐந்து வருடங்களுக்கும் ஒரு முறை திருத்தப்பட வேண்டும் என்பதுடன் அதன் முந்தைய ஐந்து வருடத்தின் இறுதியில் அறவிடப்பட்ட வருடாந்த குத்தகைப் பணத்திற்கு 20% சேர்க்கப்பட வேண்டும்.

தவணைப்பணம்.- தவணைப்பணம் அறவிடப்படமாட்டாது;

(ஆ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(இ) குத்தகைக்காரரினால் இக்காணி வர்த்தக நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது;

(ஈ) பிரதேச செயலாளர், இலங்கை முதலீட்டுச்சபை மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும்;

(உ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளபோது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்திசெய்யாத பட்சத்தில் குத்தகையை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்;

(ஊ) மாண்புமிகு அமைச்சர் அங்கீகரித்த திகதியிலிருந்து 05 வருட காலப்பகுதி பூர்த்தியாகும் வரையிலும், இந்தக் காணி குத்தகைக்குப் பெற்றுள்ள நோக்கத்தை நிறைவுசெய்வதற்கான கீழ்க் குத்தகை அல்லது கைமாற்றம் செய்தல் அனுமதிக்கப்படமாட்டாது;

(எ) குத்தகைப் பணம் ஒழுங்காகக் கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்.

04. இக் காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை வர்த்தமானியில் இவ்வறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாதுவிடின் இக்குத்தகை வழங்கப்படும்.

எஸ். பி. சாமிகா சுபோதினி,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
காணிச் செயலகம்,
"மிஹிகெத மெதுர".
இல. 1200/6, ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2018, செத்தெம்பர் 27.

10-716

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.